உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 09 ஆம் நாள் வியாழக் கிழமை

**S.C.No. 143 / 2024**

C.N.R.No.TNTS02-000100-2024

(தென்காசி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 08 / 2024)
ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய குற்ற எண். 11 / 2023)

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>ஆழ்வார்குறிச்சி காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | எதிரிகள் :-<br>1) கருப்பசாமி (எ) கட்டபீடி, வயது 49/24<br>த.பெ. வேல்சாமி,<br>நடுத்தெரு,<br>கோவிந்தபேரி,<br>ஆழ்வார்குறிச்சி.<br>2) கிருஷ்ணசாமி (எ) கிட்டு, வயது 27/24<br>த.பெ. கருப்பசாமி (எ) செல்லப்பா,<br>பொன்நகர்,<br>பொட்டல்புதுார். |
| அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act – ன்படி குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரிகள் மீது வனைந்த குற்றச்சாட்டுகள் | | எதிரிகள் மீது இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act-ன் |

| | | |
|---|---|---|
| | | கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் கூற்று | : | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | : | எதிரிகள் இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act – ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு | : | முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act– ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, எதிரிகளை இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act– ன் படியான குற்றங்களிலிருந்து, குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் இந்நீதிமன்ற பிஆர் எண் 160/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள காக்கிநிற கவரில் சுற்றப்பட்டு எஸ்கெச்ஓ சீல் வைக்கப்பட்ட கஞ்சா 265 கிராம். காக்கி |

| | | |
|---|---|---|
| | | நிற கவரில் சுற்றப்பட்டு எஸ்கெச்லூ சீல் வைக்கப்பட்ட மாதிரி கஞ்சா 25 கிராம் ஆகியவற்றை Drug Disposal Committee க்கு அனுப்பப்படுவதற்காக மேல் முறையீட்டு காலம் முடிந்த பின்பு சுருக்கு அறிக்கையுடன் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமென்றும், Rock Light Electronic எடை மிஷின் ஒன்று பயனற்ற பொருள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள TN 76 AZ 6819 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தை அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 2580/2023 24.03.2023 தேதியிட்ட உத்தரவுபடி கருப்பசாமி என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், நீதிமன்ற வைப்பீட்டில் இருக்கும் கஞ்சா விற்ற பணம் ரூ.15350/– ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுக்கு ஆதாயமாக்க வேண்டும் என்றும் மேல் முறையீடு இருப்பின் மேல் |

| | | |
|---|---|---|
| | | முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது தென்காசி கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 20.03.2024 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.08/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு மேல் விசாரணைக்காக தென்காசி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.143/2024** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று, 15.04.2024 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **01.07.2026** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு.R. சுரேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. அருணாசலம் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (09.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>**தீர்ப்புரை**</u>

1. அரசுத்தரப்பில், இவ்வழக்கின் புகார்தாரர் போலீஸ் பார்ட்டி சகிதம் கடந்த 22.01.2023 ம் தேதி காலை 08.00 மணிக்கு வெள்ளிகுளம் – பாப்பான்குளம் செல்லும் ரோட்டில் ரோந்து செய்து வரும் போது ஏ.பி. நாடானூர் விலக்கு பஸ் ஸ்டாப் முன்பு வைத்து இவ்வழக்கின் 2 வது எதிரியான கிருஷ்ணசாமி என்ற கிட்டு என்பவர் கடந்த 13.01.2023 ம் தேதி திருநெல்வேலி டவுண்ட் ரயில்வே ஸ்டேசன் பக்கம் வைத்து தெரியாத நபரிடமிருந்து தமிழக அரசால் விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடியதும் போதை ஏற்படுத்தி உணர்வை மழுங்க செய்து மயக்கம்

தரக்கூடியதுமான சுமார் ஒரு கிலோ அளவுள்ள கஞ்சாவை விலைக்கு வாங்கி வந்து அதனை 1ம் எதிரி கருப்பசாமி என்பவரிடம் விற்பனை செய்ய கொடுத்ததாகவும், 1ம் எதிரி தன்னிடமிருந்து Rock Light Electronic Machine என எழுதப்பட்ட சிறிய எடை பார்க்கும் இயந்திரத்தின் மூலமாகவும் சிறிய பிளாஸ்டிக் கவர்கள் மூலமாக கஞ்சாவை சிறு சிறு பொட்டலங்களாக தயார் செய்து அதனை 1 வது எதிரி கருப்பசாமி என்ற கட்டபீடி தனக்கு சொந்தமான TN 76 AZ 6819 என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி ரூ.15,350/– க்கு விற்பனை செய்தும் பின்னர் மீதமுள்ள சுமார் 290 கிராம் எடையுள்ள கஞ்சாவை எதிரிகள் இருவரும் தங்கள் கைவசம் வைத்திருந்ததாகவும், எனவே எதிரிகள் பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –ன் படி குற்றம் புரிந்துள்ளதாக ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 328 –ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரிகள் மீது இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு

சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) <u>அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:</u>–

அசா.1 உதவி ஆய்வாளர் முருகன், தலைமை காவலர்கள் மாரிமுத்து, முதல் நிலை காவலர் அசா–2 ராஜேஷ் ஆகியோர்கள் இரகசிய தகவலின் படி பில்லிக்குளம் மெயின்ரோட்டில் ரோந்து சென்ற போது எதிரிகள் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்துள்ளார்கள். போலீஸ் பார்ட்டியை பார்த்தபோது எதிரி கிருஷ்ணன் ஓடி விட்டார். எதிரி கருப்பசாமி என்பவரை பிடித்து விசாரித்தபோது அவர் 290 கிராம் கஞ்சா வைத்திருந்துள்ளார். அவருடைய கையில் இருந்த பணம் ரூ.15350/– ஆகியவற்றை கைப்பற்றி அத்தாட்சி அசாஆ–1 பிறப்பித்துள்ளார். 25 கிராம் கஞ்சாவை மாதிரிக்காக தனியாக எடுத்துக் கொண்டு மீதி 265 கிராம் கஞ்சாவை நிலையம் கொண்டு வந்து எஸ்கெச்ஓ சீல் வைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இது பற்றி எதிரியிடம் விசாரித்தபோது கஞ்சாவை 2ம் எதிரி கிருஷ்ணசாமி 1ம் எதிரியிடம் தந்து விற்க சொன்னதாக கூறியுள்ளார். எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து முதல் தகவல் அறிக்கை அசாஆ–2 பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 22.01.2023 ம் தேதி 11.15 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அசா–5 சந்திரசேகர் மற்றும் சந்தனகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–3 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ–4 தயார் செய்துள்ளார். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 அசாஆ–5 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அசா–8 உதவி ஆய்வாளர் அன்னலட்சுமி என்பவர் பணியில் இருந்த போது 14.02.2023 அன்று இரசாயன

பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய வட்டார தடய அறிவியல் அலுவலர் வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகுப்பாய்வு அறிக்கை அசாஆ–9 பெற்றுள்ளார். பின்னர் 28.08.2023 ம் தேதி 17.00 மணிக்கு இவ்வழக்கின் 2ம் எதிரியை கைது செய்துள்ளார். சாட்சிகள் முத்துக்குமார், பட்டு ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் விசாரணையை முடித்து வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். பின்னர் இந்த வழக்கை ஆய்வாளர் கௌதமன் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது எதிரிகள் 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளனர். எதிரிகள் தரப்பில், சாட்சிகள் 'இல்லை' என்று கூறியுள்ளார்கள்.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,

அரசுத்தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

**8) தீர்வு–**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் 2ம் எதிரி தமிழக அரசால் விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடியதும் போதை ஏற்படுத்தி உணர்வை மழுங்க செய்து மயக்கம் தரக்கூடியதுமான சுமார் ஒரு கிலோ அளவுள்ள கஞ்சாவை விலைக்கு வாங்கி வந்து அதனை 1ம் எதிரி கருப்பசாமி என்பவரிடம் விற்பனை செய்ய கொடுத்ததாகவும், 1ம் எதிரி Rock Light Electronic Machine என எழுதப்பட்ட சிறிய எடை பார்க்கும் இயந்திரத்தின் மூலமாகவும் சிறிய பிளாஸ்டிக் கவர்கள் மூலமாக கஞ்சாவை சிறு சிறு பொட்டலங்களாக தயார் செய்து அதனை 1 வது எதிரிக்கு

சொந்தமான இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி ரூ.15,350/– க்கு விற்பனை செய்தும், பின்னர் மீதமுள்ள சுமார் 290 கிராம் எடையுள்ள கஞ்சாவை எதிரிகள் இருவரும் தங்கள் கைவசம் வைத்திருந்ததாகவும், உள்ள இந்த வழக்கானது அரசுதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

9. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் மிகுந்த முரண்பாடுகள் உள்ளது எனவும், இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை எனவும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

10. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், 2ம் எதிரி தமிழக அரசால் விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடியதும் போதை ஏற்படுத்தி உணர்வை மழுங்க செய்து மயக்கம் தரக்கூடியதுமான சுமார் ஒரு கிலோ அளவுள்ள கஞ்சாவை விலைக்கு வாங்கி வந்து அதனை 1ம் எதிரி கருப்பசாமி என்பவரிடம் விற்பனை செய்ய கொடுத்ததாகவும், 1ம் எதிரி Rock Light Electronic Machine என எழுதப்பட்ட சிறிய எடை பார்க்கும் இயந்திரத்தின் மூலமாகவும் சிறிய பிளாஸ்டிக் கவர்கள் மூலமாக கஞ்சாவை சிறு சிறு பொட்டலங்களாக தயார் செய்து அதனை 1 வது எதிரிக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி ரூ.15,350/– க்கு விற்பனை செய்தும், பின்னர் மீதமுள்ள சுமார் 290 கிராம் எடையுள்ள கஞ்சாவை எதிரிகள் இருவரும் தங்கள் கைவசம் வைத்திருந்ததாக கூறப்பட்டு எதிரிகள் மீது இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act– ன்கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

11. அசா.1 உதவி ஆய்வாளர் முருகன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் இரகசிய தகவலின் படி பில்லிக்குளம் மெயின்ரோட்டில் ரோந்து சென்ற போது எதிரிகள் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்ததாகவும், போலீஸ் பார்ட்டியை பார்த்தபோது எதிரி கிருஷ்ணன் என்பவர் ஓடி விட்டதாகவும் எதிரி கருப்பசாமி என்பவரை பிடித்து விசாரித்தபோது அவர் 290 கிராம் கஞ்சா வைத்திருந்தார் எனவும் அவர் கையில் கஞ்சா விற்ற பணம் ரூ.15350/– ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார். அசா–2 முதல் நிலை காவலர் ராஜேஷ் என்பவர் சம்பவத்தை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

12. இந்த வழக்கில் சம்பவம் நாள் அசா–1, அசா–2 ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு ரோந்து சென்றதாக எந்த ஆவணங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரிகள் கஞ்சா மற்றும் எடை மிஷினை எங்கிருந்து வாங்கினார்கள் என்று புலன் விசாரணை அதிகாரி அசா–8 உதவி ஆய்வாளர் அன்னலட்சுமி என்பவர் தெளிவுப்படுத்தவில்லை. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் முருகன் என்பவர் தான் கண்ணுற்ற சாட்சியாகவும் இருந்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்றதாக தனிநபர் சாட்சியங்கள் எவரும் அரசுத்தரப்பில் இல்லை. சம்பவத்தை குறித்து அசா–1, அசா–2 ஆகியோரின் சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளது. இந்நிலையில் எதிரிகள் தரப்பில் கூறியவாறு புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளதா என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

13. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act – ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, எதிரிகளை இதச பிரிவு 328 மற்றும் பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act– ன் படியான குற்றங்களிலிருந்து, குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

15. இவ்வழக்கில் இந்நீதிமன்ற பிஆர் எண் 160/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள காக்கிநிற கவரில் சுற்றப்பட்டு எஸ்கெச்ஓ சீல் வைக்கப்பட்ட கஞ்சா 265 கிராம். காக்கி நிற கவரில் சுற்றப்பட்டு எஸ்கெச்ஓ சீல் வைக்கப்பட்ட மாதிரி கஞ்சா 25 கிராம் ஆகியவற்றை Drug Disposal Committee க்கு அனுப்பப்படுவதற்காக மேல் முறையீட்டு காலம் முடிந்த பின்பு சுருக்கு அறிக்கையுடன் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமென்றும், Rock Light Electronic எடை மிஷின் ஒன்று பயனற்ற பொருள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள TN 76 AZ 6819 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தை அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 2580/2023 24.03.2023 தேதியிட்ட உத்தரவுபடி கருப்பசாமி என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், நீதிமன்ற வைப்பீட்டில் இருக்கும் கஞ்சா விற்ற பணம் ரூ.15350/– ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுக்கு ஆதாயமாக்க வேண்டும் என்றும் மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும்

உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 09 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 17:25:41 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. முருகன் (உதவி ஆய்வாளர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |
| 2 | திரு. ராஜேஷ் (முதல் நிலை காவலர்) | சம்பவ சாட்சி |
| 3 | திரு. கண்ணன் | அத்தாட்சி சாட்சி |
| 4 | திரு. சரத்குமார் | அத்தாட்சி சாட்சி |
| 5 | திரு. சந்திரசேகர் | பார்வை மகஜர், வரைபடம் சாட்சி |
| 6 | திரு. முத்துக்குமார் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| 7 | திரு. பட்டு | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| 8 | திருமதி. அன்னலட்சுமி (உதவி ஆய்வாளர்) | புலன் விசாரணை அதிகாரி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | அத்தாட்சி | அ.சா.1 |
| 2. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.1 |
| 3. | பார்வை மகஜர் | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| 4 | வரைபடம் | அ.சா.1 |
| 5 | படிவம் 91 | அ.சா.1 |
| 6 | அத்தாட்சியில் அசா–3 ன் 1வது கையெழுத்து. | அ.சா.3 |
| 7 | அத்தாட்சியில் அசா–4 ன் 2வது கையெழுத்து. | அ.சா.4 |
| 8 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அசா–7 ன் 2வது கையெழுத்து | அ.சா.7 |
| 9 | பகுப்பாய்வு அறிக்கை | அ.சா.8 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை.
எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை
எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள் :– இல்லை

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 17:25:46 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

பின் குறிப்பு:–

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.